**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 28/2022**

**Date** :11.02.2026

**பி. வா.சா1-மகேஷ்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

30.11.2025 அன்று சபை நாள் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி சபை நாளில் அந்த நாள் அந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது என்றால் சரிதான்.

ஒவ்வொரு ஆண்டும் சபை நாளின்போது ஆண்டறிக்கை வாசிப்பது வழக்கம் என்றால் சரிதான். 2016 முதல் 2019 வரை அவ்வாறு ஆண்டறிக்கை சபை நாளில் வாசிக்கப்பட்டது என்றால் சரிதான். 2016 முதல் 2019 ல் வாதி செல்வின் சபை மூலமாக YMM Missionery தாங்குவதாக அறிக்கை வாசிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆண்டறிக்கைகளில் வாதி செல்வின் சபை மூலமாக YMM Missionery தாங்குவதாக அறிக்கை வாசிக்கப்பட்டது நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி YMM Missionery க்கு பணம் அனுப்பியது குறித்து நானோ சர்ச்சின் உறுப்பினர்களோ ஆட்சபனை தெரிவிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்ச் ஆவணங்களை மேற்படி ஆட்சேபனை கொடுத்திருந்தால் அது குறித்த விவரங்கள் துலங்குமா என்றால் தெரியாது.

ராஜதுரை செயலாளராக இருந்தபோது வாதி தகராறு செய்ததாக எதிருரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் எனது எதிருரையில் ஆதாரமற்ற விவரங்கள் குறித்து கூறுகிறேன் .ஆகையால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியவில்லை என்றால் சரியல்ல. வாதி YMM Missionery க்கு பணம் வாங்க வேண்டும் என்று வழக்கறிவிப்பு அனுப்பியிருந்தாரா என்றால் அனுப்பியிருந்தார். மேற்படி வழக்கிறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பு

கணக்குகள் எதுவும் உ ரிய நிர்வாகத்தின் பெயரில் மாற்றப்படவில்லை அதனால் வாதியின் காசோலை வாங்கவில்லை என்று சொல்லியிருந்தேனா என்றால் ஞாபகம் இல்லை. வாசாஆ 4 நான் அனுப்பிய பதில் அறிவிப்பு என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 4 ல் கணக்குகள் எதுவும் உரிய நிர்வாகத்தின் பெயரில் மாற்றப்படவில்லை என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 2 ல் பிஷப் பிறப்பித்த உத்தரவு குறித்து இல்லை என்றால் சரியல்ல. பிவாசாஆ 2 ஐ தவிர பிஷப் பிறப்பித்த உத்தரவு குறித்த ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. 2022 ம் ஆண்டு உத்தரவு தேதி ஞாபகம் இல்லை. மேற்படி 2022 ம் ஆண்டு உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி 2022 ம் ஆண்டு உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மைதன்மை தெரியவரும். ஆகையால் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல.

வாதிக்கும் சர்ச் நிர்வாகத்திற்கும் இடையே தகராறு குறித்த வழக்குதான் என்பதால் O 1 Rule 8 என்பது பொருந்தாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பிஷப்பை கட்சி சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு சமுதாயத்தில் இருக்ககூடிய நல்மதிப்பை குறைக்க வேண்டி நான் YMM Missionery க்கு வாதி கொடுத்த பணத்தை வாங்கமாட்டோம் என்று கூறினோம் என்றால் சரியல்ல. ஆகையால் வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதியின் உரிமை பாதுகாக்க இவ்வழக்கு வாதிக்கு வேண்டி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

பிவாசாஆ 1 திருத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி சர்ச்சில் உறுப்பினர் என்பதால் அவர் கொடுத்த பணத்தை YMM Missionery க்கு அனுப்ப வேண்டிய கடமை எங்களுக்கு உண்டு என்றால் சரியல்ல. எனது எதிருரை மற்றும் நிருபண

வாக்குமூலத்தில் கூறிய விவரங்கள் அனைத்தும் தவறு என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது</u>**.